1991 செப்டம்பர் 25]

74—

கள்ளக்குறிச்சி நகரில் மாற்றுப்பாதை அமைத்தல்.

*751. .திரு ஆர். பி. பரமசிவம் :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கள்ளக்குறிச்சி நகரின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்றுப்பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள இம்மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம்ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லதரசு"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப வருகிற வருமானத்தை வகுத்து செலவு செய்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் இந்த நெருக்கடியான நிதி நிலையிலும் சாலை போக்குவரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பதால், கள்ளக்குறிச்சியின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புறவழிச்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் போல இந்த சாலை களுடைய முக்கியத்துவத்தை இந்த அரசு நன்றாக உணர்ந் திருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் சாலைகள் ஒழுங்காக முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்பது நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டமாகும். இருந்தாலும் தமிழகம் முழுவதும் ஓரே ஆண்டு காலத்திற்குள்ளாக அவைகள் சீரமைக்கப்பட வேண்டுமென்றால், பல கோடி ரூபாய் தேவையிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையை ஏற்று இந்த பிரச்சினை குறித்து இந்த நிதி ஆண்டில் முடியா விட்டாலும், அடுத்த நிதி ஆண்டில் கனிவோடு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)